# *என்றாவது ஒரு நாள் !!!*



பரவசமானேன்
உன்னைக் கண்டு பரவசமானேன்
ஏதும் அறியாபருவத்தில்
தித்திக்கும் தேனமுது கொடுத்து
தத்தி நடக்கும் பருவத்தில்
பெற்றோர்க்கு புகழ் சேர்த்த
பெண்மையே
பரவசமானேன்
உன்னைக் கண்டு பரவசமானேன்
குயிலோசை வென்றிட்ட
உன் குரலோசை
அதில் குவிந்தன விருதுகள்
ஊர் போற்றும் பாவையே
உன்னைக் கண்டு
பரவசமானேன்
நான் பரவசமானேன்
முயற்சியே வெற்றி என
பூமியை முட்டி மோதி மேலெழும்
விதைத்த விதைபோல்
தடைகள் பல வந்தாலும்
தளராமல் தகர்த்தெறிந்து
வெற்றிக்கே
உன் பிறப்பென வளர்ந்திட்ட
கவிக்குயிலே
இசைக்கு இறப்பேது
இங்கே
உன் குரலுக்கு முடிவேது
இசையின் வாரிசே
உன் இசை குரலுக்கு காத்திருக்கு
“பத்மஸ்ரீ”

எதிர்நோக்கும் இதயம்